**செய்தி வெளியீடு எண்: 05/2021** **நாள்: 23.12.2021**

**<u>சென்னை மெட்ரோ இரயிலில் பயணிப்பதற்கான பயண அட்டையை எளிதில் பெறலாம் மேலாண் இயக்குநர் பிரதீப் யாதவ் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயிலில் பயணிப்பதற்கான பயண அட்டையை அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் எளிதில் பெற்று கொள்ளலாம் என்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண் இயக்குநர் பிரதீப் யாதவ் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சென்னை மெட்ரோ இரயில் பயண அட்டையை விற்பனை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட முதல் முகவராக வில்லிவாக்கத்தை சேர்ந்த ஆர்.பிரேம்நாத் என்பவருக்கு மெட்ரோ இரயில் பயண அட்டைகளை வழங்கி முதல் விற்பனையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண் இயக்குநர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண் இயக்குநர் கூறியதாவது:

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களை தவிர அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் பயண அட்டையை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் பயண அட்டையை விற்பனை செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு 5% கமிஷன் வழங்கப்படுகிறது. மேலும் பயண அட்டையை பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 20% கட்டண தள்ளுபடியும் அளிக்கப்படுகிறது.

முகவர்களுக்கான விண்ணப்படிவம் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தையும், தேவைப்படும் பயண அட்டைக்கான இருப்புத் தொகையையும் செலுத்தி பயண அட்டையை அந்தந்த மெட்ரோ இரயில் நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பயண அட்டையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவன கைப்பேசி செயலி அல்லது ஏதேனும் ஒரு சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் ரீசார்ஜ் செய்து கொள்ளலாம்.

முகவர்களாக விருப்பம் உள்ளவர்கள் உதவி எண் – 18604251515, மின்னஞ்சல் – customercare@cmrl.in மற்றும் கைபேசி எண் – 9445196185 இவைகளில் தொடர்பு கொள்ளலாம்.

பயண அட்டையை பெற உள்ளவர்கள் அருகிலுள்ள மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டு அலுவலரை அல்லது உங்கள் பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை அணுகலாம். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எடுத்துவரும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

இவ்வாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண் இயக்குநர் பிரதீப் யாதவ் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**